**தலைப்பு 236 – அரச கரும மொழிகள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

அரசாங்க கரும மொழிகள் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்க கரும மொழிகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 13 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க கரும மொழிகள் திணைக்களத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என கூற முடியாதிருந்தது.

(ஆ) திணைக்களத்தால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 காசுப்பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது பொருட்களை அகற்றியதிலிருந்து பெறப்பட்ட ரூபா 93,680 வருமானம் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்டிருக்காததுடன் இது கட்டணங்கள், மிகைக் கட்டணங்கள், தண்டப்பணங்கள் மற்றும் அனுமதிப்பத்திர வருமானமாக காட்டப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்கள் குறித்துரைக்கப்பட்ட மாதிரியின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அத்தகைய குறைபாடுகள் ஏற்படாதவாறு உத்தியோகத்தர்களிற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |

### 1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

அரச கரும மொழிகள் திணைக்களத்தால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டும் பேணப்பட்டிருக்காதமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) பிணைப் பதிவேடு** | | |
| நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை செலுத்த வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கி பிணைப் பதிவேடொன்று | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்ட தகவல்கள் உள்ளடக்கப்படும் வகையில் பிணை செலுத்த வேண்டிய | பிணைப் பதிவேடொன்றை பேணுவதற்கு உரிய உத்தியோகத்தர்களிற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |

| | | |
|---|---|---|
| தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்கள் தொடர்பாக பிணைப் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | |

**(ஆ) வாகன சம்பவத்திரட்டுப் புத்தகங்கள்**

| | | |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 1645(அ) இன் பிரகாரம் வாகன சம்பவத்திரட்டுப் புத்தகங்கள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 1645(அ) இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் ஒவ்வொரு வாகனத்திற்கும் பேணப்படும் வாகன சம்பவத்திரட்டுப் புத்தகங்கள் நாளதுவரையாக்கப்பட வேண்டும். | வாகன சம்பவத்திரட்டுப் புத்தகங்கள் நாளதுவரையாக்கப்படுவதற்கு உரிய உத்தியோகத்தர்களிற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |

**(இ) விடுமுறைப் பதிவேடு**

| | | |
|---|---|---|
| தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 1.7 ஆம் பிரிவின் பிரகாரம் விடுமுறைப் பதிவேடு பேணப்பட்ட போதிலும் அது நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 1.7 ஆம் பிரிவின் பிரகாரம் விடுமுறைப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட வேண்டும். | விடுமுறைப் பதிவேட்டிலுள்ள குறைபாடுகளை சீர்செய்வதற்கு உரிய உத்தியோகத்தர்களிற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் விடுமுறைப் பதிவேட்டை சீர்செய்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

### 1.6.3 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அரச கரும மொழிகள் திணைக்களத்தின் நிதி நிர்வாகத்திற்காக வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றமை கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்கள் திறைசேரியின் மாதிரியின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் இக் குறைபாடுகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வினைத்திறன் தொடர்பாக முன்னர் காணப்பட்ட மீளாய்வை எழுத்துமூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று இடம்பெற்றமைக்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | உள்ளகக் கணக்காய்வு இலக்குகளை சரியான பிரகாரம் அமுல்படுத்துவதற்காக வினைத்திறனான திட்ட முறைமையொன்று உள்ளதென கணக்கீட்டு உத்தியாகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் அந்த தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பொது நிர்வாக அமைச்சால் உத்தியோகத்தர்கள் வழங்கப்பட்டிருக்காததன் காரணமாக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவை ஸ்தாபிக்க முடியதாதிருந்தது. |

### 1.6.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| (அ) | 2016 மார்ச் 31 ஆம் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.1.6 ஆம் பந்தி | 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் 2019 மார்ச் 17 இல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ் அறிக்கைகள் 2019 யூன் 10 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் களஞ்சியங்களில் உள்ள புத்தகங்கள் மெய்மையாய்வு | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய திகதியில் பொருள் மெய்மையாய்வு செய்யப்பட்டு உரிய தரப்பினர்களிற்கு அவ் அறிக்கைகளை உரிய திகதியில் அனுப்புவதற்கு நடவடிக்கை | பொருள் மெற்மையாய்வு நடவடிக்கைகள் 2019 மார்ச் 12 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் கைதவிர்த்தல் நடவடிக்கைகள் தாமதமாகியிருந்ததுடன் இறுதி அறிக்கை விரைவில் கணக்காய்வாளர் தலைமை |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டு அவ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில் லை. | எடுக்கப்பட வேண்டும். | அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படும். |
| (ஆ) 2006 மார்ச் 13 ஆம் திகதிய 1/2006 ஆம் இலக்க இணைந்த சேவைகள் சுற்றறிக்கை தொடர்பான 2016 திசெம்பர் 22 ஆம் திகதிய 2004/ஜூஸ/1 (2016 இல் திருத்தப்பட்டது) ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் ஆவணப்படுத்தல் சேவைகள் சபை சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | 6,415 நூலக புத்தகங்கள் தொடர்பாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்காததுடன் அந் நூலக புத்தகங்களின் பெறுமதி 2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் நிதியல்லாச் சொத்துக்களின் கீழேயும் காட்டப்பட்டிருக்கவில்லை. | நூலக புத்தகங்கள் தொடர்பாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அவற்றின் பெறுமதி நிதிக்கூற்றுக்களி ல் உள்ளடக்கப்பட வேண்டும். | பொருள் கணக்கெடுப்பு சபையை நியமனம் செய்து 2019 யூன் 30 இல் உள்ளவாறு புத்தகங்கள் தொடர்பாக மெய்மையாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் பெறுமதியை கணிப்பீடு செய்து 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் அதனை உள்ளடக்குவதற்கு உத்தியோகத்தர்களிற் கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 வருமான முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட விற்பனைக் கட்டணங்கள் மற்றும் ஏனைய பெறுவனவுகள் ரூபா 61.5 மில்லியனாக இருந்த போதிலும் உள்ளபடியான வருமானம் ரூபா 37.86 மில்லியன் அதாவது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 61 சதவீதம் மாத்திரமேயாகும் | வருமான மதிப்பீடுகளை தயாரிக்கும் போது இயலுமானளவு சேகரிக்கப்படுவதற்கு சாத்தியமான வருமானம் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | கற்கைநெறிகளிற்காக பங்குபற்றுதல் குறைவடைந்தமை மற்றும் திசெம்பர் மாதத்திற்கான மாணவர்களை பதிவுசெய்தல் பிற்போடப்பட்டிருந்தமை என்பன மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் குறைவடைவதற்கான காரணங்களாக காணப்பட்டன. |

**2.2 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) **மேலதிக நிதியேற்பாடு மேற்கொள்ளப்படுதல்**<br>ரூபா 300,000 தொகையான மீண்டெழும் செலவின விடய நிதியேற்பாடு நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் வேறு செலவின விடயத்திற்கு மாற்றம் செய்யப்பட்டிருந்த போதிலும் அச் செலவின விடயத்தின் கீழ் 51 சதவீதத்திற்கு சமமான ரூபா 51,149 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. | வருடாந்த மதிப்பீட்டின் மூலம் மேலதிக நிதியேற்பாடு மேற்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படக்கூடாது. | எதிர்காலத்தில் அத்தகைய நிலைமை ஏற்படாதவாறு மதிப்பீட்டினை தயாரிப்பதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| (ஆ) ரூபா 500,000 தொகையான மூலதன செலவின விடயம் வேறு செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்த போதிலும் அச் செலவின விடயத்தின் கீழ் 55 சதவீதத்திற்குச் சமமான ரூபா 1.92 மில்லியன் தொகை சேமிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | மொழி வினைத்திறனை அளவிடும் கணனி மென்பொருளை தாரிப்பதற்குப் பொருத்தமான வழங்குநரை தெரிவு செய்வதில் தாமதம் ஏற்பட்டமை ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியேற்பாடு சேமிக்கப்பட்டதற்கு காரணமாக உள்ளதுடன் 2019 ஆம் ஆண்டின் போது பொருத்தமான வழங்குநருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. |

**2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) 09 செயற்பாடுகளிற்காக 2018 ஆம் ஆண்டில் தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சினால் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 18.54 மில்லியன் தொகையான நிதியேற்பாட்டில் ரூபா 5.37 மில்லியன் தொகையான நிதியேற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த செயற்பாட்டை தாமதமின்றி நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அமைச்சினால் 09 செயற்பாடுகளிற்காக ரூபா 24,048,388 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்டவாறு செலவினம் மேற்கொள்ளப்படாததால் அதில் ரூபா 5.5 மில்லியன் தொகை மீண்டும் அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தது. |
| (ஆ) அமைச்சின் நிதியேற்பாடுகளில் ரூபா 300,000 செலவிடப்பட்டு | நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த | வழங்குநரொருவரிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததன் |

| | | |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் போது நிறைவேற்றப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த “Converting the spoken Tamil into Audio book” இன் செயற்பாடு எதுவும் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செயற்பாட்டை தாமதமின்றி நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காரணமாக அச் செயற்பாட்டை நிறைவேற்ற முடியாதிருந்தது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பெறுகை**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.2.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் போட்டிக் கேள்விகள் கோரப்படாமல் ரூபா 585,200 பெறுமதியான 8,000 புத்தகங்கள் முன்னைய ஆண்டில் அச்சிடல் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த நிறுவனத்திடமிருந்து உயர் விலையில் அச்சிடப்பட்டிருந்தன. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வரையறுக்கப்பட்ட காலப்பகுதியினுள் பெறுகை வழிகாட்டலை பிரயோகித்து நிறைவேற்றப்பட முடியாதிருந்தது. இச் சிக்கல் நிலைமை காரணமாக முன்னைய ஆண்டின் அச்சிடல் நடவடிக்கையை மேற்கொண்ட நிறுவனத்தால் அச்சிடல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

**3.2 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| சிங்களம் - தமிழ் மற்றும் தமிழ் - சிங்களம் மொழிபெயர்ப்பு மென்பொருட்கள் இரண்டினை தயரிப்பதற்காக ரூபா 7.24 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது சிங்களம் - தமிழ் மொழிபெயர்ப்பு நடவடிக்கைகள் 529 பக்கங்கள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் தமிழ் - சிங்களம் மொழிபெயர்ப்பு நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மொழிபெயர்ப்பு நடவடிக்கைகளிற்காக தயாரிக்கப்பட்ட மென்பொருளை உச்சளவில் பயன்படுத்துதல். | சிங்களம் - தமிழ் / தமிழ் - சிங்களம் கணனி மென்பொருட்கள் சாதாரண அலுவலக கடிதங்களின் மொழிபெயர்ப்பு போன்ற நடவடிக்கைகளிற்காக திட்டமிடப்பட்டிருந்தது. |

4. நல்லாளுகை

4.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிதிப்பிரமாணம் 133 மற்றும் 2009 யூன் 09 ஆம் திகதிய டிஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தியின் பிரகாரம் திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | இவ் அவதானிப்பு முன்னைய ஆண்டுகளிலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்ளகக் கணக்காய்வு பதவியணிக்காக உத்தியோகத்தர்களை வழங்குமாறு பொது நிர்வாக அமைச்சிடம் வேண்டப்பட்டிருந்ததுடன் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் அவ் வேலை மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2009 யூன் 09 ஆம் திகதிய டிஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் அரச கரும மொழிகள் திணைக்களத்தால் 2018 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் குழுக் கூட்டத்தை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்படுவதுடன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

5. மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான 216 உள்ளபடியான பதவியணியினரில் 50 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. அதில் மூன்றாம் மட்டத்தில் | அத்தியாவசிய பதவிகளிற்காக பதவியணியினரை விரைவாக ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் மிகைப் பதவியணியினர் | வெற்றிடப் பதவிகளிற்காக உத்தியோகத்தர்களை பெற்றுக்கொள்வதற்காக பொது நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சிடம் வேண்டப்பட்டிருந்ததுடன் ஆரம்ப |

| | | |
|---|---|---|
| 34 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. | காணப்பட்டால் பொதுத் திறைசேரியுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். | மட்டத்திலுள்ள வெற்றிடங்கள் திணைக்கள மட்டத்தில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |